**இலங்கை உள்ளுர் ஆளுகை நிறுவகம் - 2022**

-----------------------------------------------------------------------------------

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை உள்ளுர் ஆளுகை நிறுவகத்தின் (“நிறுவகம்”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து எழுந்த காசுப்பாய்ச்சலில் 04 விடயங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 3,311,298 தொகை சரியாக சீராக்கப்பட்டிருக்க வில்லை. | 2022/23 மதிப்பீட்டு ஆண்டிற்குரியதாக ஒதுக்கப்பட்ட ரூபா 1,185,431 வரித்தொகை மற்றும் முன்னைய ஆண்டின் சீராக்கமாக 2021/22 மதிப்பீட்டு ஆண்டின் வருமான வரி பொறுப்பில் 2022 இல் காசாக செய்வதற்கு ஏற்பட்ட ரூபா 578,403.02 தொகை சீராக்கப்பட்டிருந்ததுடன் திறைசேரிக்கு மீளச்செலுத்த வேண்டிய பணத்தை சீராக்குதல் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 41 ஆம் பந்திக்கு இணங்காமல் முன்னைய ஆண்டில் ரூபா 459,865 ஆன செலவினங்கள் மிகை ஒதுக்கீடு திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்குரிய செலவினங்கள் பதிவழிக்கப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்வாக செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய புதிய அலுவலகக் கட்டிட தொகுதியின் நிர்மாணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மோசடியான அறிக்கைக்கு நியமிக்கப்பட்ட குழுவிற்கு செலுத்தப்பட்ட ரூபா 450,000 நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய பணிகள் ஆலோசனை ரீதியான பணியாக கருத முடியும். அதன் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அது சீராக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கைநூல் 3.2(V)ஆம் பந்தி | ஊக்குவிப்பு படிகளைச் செலுத்தும் போது ஊக்குவிப்பு படி முன்மொழிவுத் திட்டம், பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அங்கீகாக்க வேண்டிய போதும் அதன் ஆலோசனைகளுக்கு இணங்காமல் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக நிறுவனத்தின் பங்களிப்பிற்காக உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,800,000 படியாக செலுத்தப்பட்டிருந்தது. | 2022.12.26 ஆந் திகதி நடாத்தப்பட்ட 178 ஆவது நிர்வாக சபைக் கூட்டத்தின் போது பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு இதற்காக நிர்வாக சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் PED/09/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 01 இன் 02 ஆம் பந்தி | கடந்த ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மிகை ஊதிய படி செலுத்தும் போது இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 145,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 2022.12.26 ஆந் திகதி நடைபெற்ற 178 ஆவது நிர்வாக சபை கூட்டத்தில் அடிப்படையான 03 அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 25,000 வீதம் அப் பதவியணி யினரில் 29 அங்கத்தவர்களுக்கு மிகை ஊதியப் படி செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க செலுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,079,104 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,171,193 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,092,089 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விஷேட செயற்திட்ட வருமானம் ரூபா 9,578,451 இனாலும், சான்றிதழ் பத்திர பாடநெறி வருமானம் ரூபா 1,401,075 இனாலும் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டு முதல் நடைபெறுகின்ற 04 பாடநெறிகளுக்கு உரியதாக கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணத்தின் கூட்டுமொத்தம் ரூபா 1,571,250 இனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கணக்கீட்டு சீராக்கங்கள் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும். | கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்திற்காக 04 மாடிகளை உடைய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2013, ஆம் ஆண்டின் போது கேள்வி கோரி ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு ரூபா 53,196,907 தொகையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் அத்திவார நிர்மாணத்திற்காக உப ஒப்பந்தகாரருக்கு ரூபா 38,147,381 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 04 மாடிகளுக்கு போதியளவான தூண் நிர்மாணித்து அதனை 08 மாடி வரை அதிகரிப்பதற்கு திட்டம் மாற்றப்பட்டதன் காரணமாக அந்த அத்திவார தூணின் அடிப்படையில் கட்டிடம் நிர்மாணித்தல் பொருத்தமற்றதாக இருந்தமை நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் 2022.04.18 ஆம் திகதி துறைசார் நிபுணர்கள் மூன்று பேர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களினால் இந்த நிர்மாணம் தொடர்பாக முழுமையான அறிக்கை ஒன்று தயாரித்து அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அதனால் இதற்காக செலவிடப்பட்ட ரூபா 44,757,072 தொகை பயனற்றதாக இருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவியணியினரை மீள்கட்டமைப்பதன் மூலம் ஏற்பட்ட புதிய பதவிகளுக்காக பதவியணியினரை உள்ளீர்ப்புச் செய்து ஆட்சேர்த்தலுக்கு உரியதாக ஆட்சேர்ப்பு நடைமுறையைத் திருத்தும் நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புதிய ஆட்சேர்த்தல் நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக அது தொடர்பாக மீண்டும் SLIDA நிறுவனத்துடன் கலந்துரையாடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்துவதை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(3) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் கணக்காண்டு முடிவடைந்து 10 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் நிறுவகத்தின் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை தயாரிக்கப்படுகின்றது. | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |